மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 236/2019

**2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 14–ம் நாள் வெள்ளிக் கிழமை** பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி)**செல்வி. S.இவாஞ்சலின், இளநிலை உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாமிராஜ் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : மாரிமுத்து | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :வி.களத்தூர் | வயது | : 70/2025 |

**முதல் விசாரணை :**

1(i) நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக எனக்காகவும், இதர பிரதிவாதிகளுக்காகவும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பிரதிவாதிகள் தரப்பு கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.